# எச்டிஎஃப்சி பேங்க் மூலம் பாசிடிவ் பே

## இப்போது பாசிடிவ் பே மூலம் உங்கள் செக் பேமெண்ட்களை பாதுகாப்பாக ஆக்கிடுங்கள்

வாடிக்கையாளர்களுக்கு செக் மூலம் செய்யப்படும் பேமெண்ட்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கும், செக்குகளில் மாற்றம் செய்வதன் மூலம் செய்யப்படும் மோசடிகளைக் குறைப்பதற்கும் இந்த வசதி அளிக்கப்படுகிறது. எச்டிஎஃப்சி வங்கி ரூ.50,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள அனைத்து செக்குகளுக்கும் பாசிடிவ் பே என்ற ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்துகிறது. பாசிடிவ் பே மூலம், செக் வழங்கும் நேரத்தில் வாடிக்கையாளரால் அளிக்கப்படும் தகவல்களின் அடிப்படையில், இந்த செக்குகள் பணம் பெறுபவரின் வங்கியால் பணம் செலுத்துவதற்காக செயல்முறைக்கு உள்ளாக்கப்படும்.

வழங்கப்படும் செக்கின் பின்வரும் விவரங்களை, செக் கிளியரிங்கில் சமர்ப்பிக்கப்படுவதற்கு குறைந்தது 24 அலுவல் மணி நேரங்களுக்கு முன்பே வாடிக்கையாளர் வங்கியில் அளிக்க வேண்டும்.

பணம் பெறுபவர் சிடிஎஸ் கிளியரிங் மூலம் செக்கை கணக்கில் வரவு வைத்திட சமர்ப்பிக்கும்போது, பாசிட்டிவ் பே மூலம் வங்கிக்கு வழங்கப்பட்ட விவரங்கள் (கணக்கு எண்/செக் எண் மற்றும் செக் தொகை) சரி பார்க்கப்படும்.

<u>சிடிஎஸ்-க்காக பாசிடிவ் பே சிஸ்டம்-க்காக தயவுசெய்து கீழ்க்கண்டவற்றை கவனியுங்கள்:</u>

**செயல் 1:** செக்கை எழுதும் போது செக் வழங்குபவர் (டிராயர்) செக் பற்றிய பின்வரும் குறிப்பிட்ட விவரங்களை கீழே உள்ள மாதிரி மின்னஞ்சல் படிவத்தில் இணைக்கப்பட்ட எக்செல் தாளுடன், வழங்கப்பட்ட செக்கை உறுதிப்படுத்திட சமர்ப்பிக்க வேண்டும்.

* கணக்கு எண் (வாடிக்கையாளரின் கணக்கு எண்)
* செக் எண்
* செக் தேதி - (செக் வழங்கப்பட்ட தேதி)
* செக் தொகை - (தொகை எழுதும்போது கமா-ஆல் பிரிக்கக் கூடாது)
* பயனாளியின் பெயர் - (கணக்குதாரர் வழங்கிய செக்-ன் பயனாளி)

விபரங்கள் வங்கியின் கீழ்க்கண்ட இமெயில் ஐடிக்கு அனுப்பப்பட வேண்டும்:

* **Positivepaynorth@hdfcbank.com**

பஞ்சாப், உத்தரப்பிரதேசம், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், ஜம்மு அண்ட் காஷ்மீர், ராஜஸ்தான், உத்ராகண்ட், டெல்லி போன்ற வடக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு.

* **Positivepaysouth@hdfcbank.com**

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா போன்ற தெற்கு பிராந்தியங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு.

* **Positivepayeast@hdfcbank.com**

மேற்கு வங்காளம், ஒடிசா, அசாம், பீகார், ஜார்க்கண்ட், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் போன்ற கிழக்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு.

* **Positivepaywest@hdfcbank.com**

மகாராஷ்டிரா, குஜராத், மத்தியப் பிரதேசம், கோவா, சத்தீஸ்கர் போன்ற மேற்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு.

(குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் ஐடிகள் பிராந்திய மின்னஞ்சல் ஐடிகள், எனவே, தயவுசெய்து உங்கள் பகுதிக்கு ஏற்ப, அந்தந்த மின்னஞ்சல் ஐடிகளுக்கு மட்டும் மின்னஞ்சலை அனுப்பவும்.)

**செயல் 2:** செக் வழங்குபவரின் பாசிடிவ் பே கோரிக்கை, தானாகவே-ஏற்றுக் கொள்ளும் மின்னஞ்சல் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும்.

**செயல் 3:** செக் வழங்குபவரின் (டிராயர்) பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் ஐடியிலிருந்து மின்னஞ்சல் கிடைத்ததும், வங்கி விவரங்களை சரி பார்க்கும்.

**செயல் 4:** வங்கி பாசிடிவ் பே கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அல்லது நிராகரிக்கப்பட்டதற்கான உறுதிப்படுத்துதல் செக் வழங்குபவருக்கு (டிராயர்) மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

**செயல் 5:** தகவல் முரண்பாடு காரணமாக செக் நிராகரிக்கப்பட்டால், வழங்குபவர் (டிராயர்) செக்கின் சரியான விவரங்களைக் கொடுத்து மின்னஞ்சல் மூலம் புதிய பாசிடிவ் பே கோரிக்கையை தொடங்க வேண்டும். பதிவு செய்யப்படாத மின்னஞ்சல் காரணமாக நிராகரிக்கப்பட்டால், வாடிக்கையாளர் அவரது பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் ஐடியிலிருந்து மட்டுமே புதிய கோரிக்கையைத் தொடங்க வேண்டும்.

**<u>குறிப்பு:</u>** இந்த சேவை, சிடிஎஸ் கிளியரிங் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.50,000/- மற்றும் அதற்கு மேற்பட்ட காசோலைகளுக்கு மட்டுமே உரித்தாகும்.

* பாசிடிவ் பே ஜனவரி 01, 2021 முதல் செயல்படுத்தப்படுகிறது.
* தற்போது பாசிடிவ் பே சிஸ்டம் (பிபிஎஸ்) உறுதிப்படுத்துதலை வாடிக்கையாளர்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் ஐடி, **நெட் பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங்** மூலம் வழங்கலாம்.
* வாடிக்கையாளர்கள் ஆங்கில மொழியில் மட்டுமே தகவல்களைச் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
* பணம் பெறுபவரின் (பயனாளி) பெயர் விவரங்களை, செக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அதே முறையில் வழங்குவதை தயவுசெய்து உறுதிப்படுத்துங்கள்.
* பணம் பெறுபவரின் பெயரில் a-z,A-Z,0-9,_(அண்டர்ஸ்கோர்), வெற்று இடம், (அப்போஸ்ட்ரோபி), கமா, ஃபுல் ஸ்டாப் தவிர வேறு எந்த சிறப்பு எழுத்துக்களும் அனுமதிக்கப்படாது.

==========================================================================

**<u>வங்கியில் பாசிடிவ் பே கோரிக்கையைச் சமர்ப்பிக்க வாடிக்கையாளர்கள் பின்பற்ற வேண்டிய மாதிரி மின்னஞ்சல் வடிவம், முக்கிய வழிமுறை குறிப்புக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**



HDFC BANK
INDIA'S No.1 BANK